# தத்துவபோதினி.

சென்னைப்பட்டணம் கஅசுச௵ ஜுலைமீ எஉ. [இல. ங.

## கடவுள்துதி.

### இராகம் - தோடி - ரூபகதாளம்.

பல்லவி.

பிரமநீயேசரணம் - நான்பிழைக்கத்-தந்தருளுபகரணம்.

அனுபல்லவி.

என்வினையாலடைய-ஒருக்காலும்முடியாது,
உன்னருளாலோவெனில்-ஓர்நொடியுஞ்செல்லாது.........பிரம.

சரணங்கள்.

க. அன்புள்ளதாயும்நீயே-அருமைத்தந்தையும்நீயே,
உண்மைச்சுற்றமும்நீயே-உறுதிநண்பனும்நீயே,
அரியசெல்வமும்நீயே-ஆநந்தமும்நீயே,
எல்லாமெனக்குநீயே-அல்லாமல்வேறில்லை................பிரம.

உ. துணையிலாவிரவிற்கு-இணையிலாக்காவலாக,
அஞ்ஞானவிருளுக்கு-மெஞ்ஞானவிளக்காக,
பாவப்பனிதனிற்கு-பலத்தவெயிலுமாக,
இரங்கியருளுமெந்தன்-இன்பக்கடவுளான.....................பிரம.

ங. பொன்னிலொளிபோலும்-பூவிலமணம்போலும்,
உயிருக்குயிராயும் உடலுக்குயிராயும்,
என்றும்பிரியாமல்-என்னுடனேயிருந்து,
நற்கதிபளிக்கின்ற-நாதனுய்வந்துதித்த...................பிரம.

---

## அட்டவணை.


| விஷயங்கள். | பக்கம். |
|---|---|
| கடவுள்துதி............................ | ஙங |
| விளம்பரம்.............................. | ஙங |
| தத்துவபொதினி.......................... | ஙச |
| பெண்களுக்குக்கல்வி..................... | ஙரு |
| தெய்வபக்த்தியாலுண்டாகும்சுகம்.......... | ஙசு |
| அர்த்தசாஸ்திரம்......................... | ச0 |
| பிரகிருதிசாஸ்திரம்...................... | சஉ |
| உபநிஷத்து.............................. | சங |
| லார்ட்டுபேகன் வியாசம்.................. | சரு |
| வர்த்தமானக்குறிப்பு..................... | சரு |
| பிரஸிடென்ஸிகாலெஜு..................... | சசு |
| நார்மல்ஸ்கூல்........................... | சசு |
| ரெயில்வண்டி............................ | சசு |
| பஞ்சுஸ்கிரு............................. | சஎ |
| பழமொழிகள்............................. | சஎ |
| காலைவந்தனம்........................... | சஎ |
| மாலைவர்தனம்........................... | சஎ |
| அகவிலை................................ | சஅ |


## விளம்பரம்.

இந்த சென்னைத் தத்துவ போதினியை வாங்க மனமுடைவர்கள் மயிலாப்பூரில் வேதஸமாஜத்தின் காரியதரிசியாகிய-ஹைகோர்ட்டு வக்கில். வ. இராஜகோபாலாசாரியருக்கு, எழுத்து மூலமாய்த் தெரிவித்துக் கோள்ளவேண்டியது.

## இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்திலுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்..................க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.. உ - 0 - 0

பத்து பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்..... ..... .........க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள் தங்கள் சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ள வேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத் தொடங்குவோர் வருஷத்திய சந்தாவும் கொடுக்கவேண்டும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனால், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதற்காக, ரூபாய் ஒன்றுக்கு ஒரு அணா வீதம் வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிக்கையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாறும்போது அந்த விவரத்தை தயைசெய்து காரியதரிசிக்குத் தெரிவிக்கவேண்டியது.

## தத்துவபோதினி.

சோதரர்களே; இந்தப் பத்திரிகையில் எழுதப்படும் வேதார்த்தங்களெல்லாம், சமஸ்கிருதத்திலுள்ள வாக்கியங்களினின்று பதத்துக்குப்பதம் சரியாய்மொழிபெயர்த்து எழுதப்படுவதால், சில பாகங்களுக்கு ஸ்பஷ்டமாய் பொருள் தெரியாமலும், பூர்வோத்தர விரோதங்களிருப்பதுபோலும் தோன்றும். அதை ஆதியோடந்தமாய் நன்றாய்ப் படிக்காதவர்களுக்கு இவ்வித சந்தேகங்கள் நீங்குவது அருமையாகையாலும், வேதத்தின் பாஷை சாதாரணமாய் உலகத்திலுள்ள வியாகரணவிதிகளுக்கு உள்படாமையாலும், அதை ஆமூலாக்கிரம் ஐகண்டிகம்செய்து, யுக்தமாகப் பொருள் விளங்கும்படிசெய்ய பாஷியமென்று வழங்கிவரும் உரைநூல்களின் உதவி ஆவசியகமாகும். இதுபற்றிதான் சங்கராசாரியர், இராமானுஜாசாரியர், மத்துவாசாரியர், வித்தியாரண்யர், ராஜாராமமோஹனராய், முதலிய அநேக நவீன வித்துவான்களும், பூர்வத்தில் வேதங்கள் பிறந்தகாலத்தில் உயிர்வாழ்ந்த ரிஷிகளும் வேதங்களுக் குரைசெய்திருக்கின்றனர்.

சுவபாவத்தில் ஒரே தன்மையையுடைய ஆற்றுநீர் பலவகை நிலத்தில் பிரவஹிக்குந்தோறும், அதின் நிறமும், குணமும், உருசியும் மாறுவது லோகப்பிரசித்தம். இம்மாதிரியாகவே மேற்கண்ட உரைகளை யெழுதிய பாஷியகாரர்கள் பிரும்மத்தின் விஷயத்தில் முதலில் பலவித அபிப்பிராயத்தைக் கொண்டு, பிறகு அதற்கு இயைந்தபடி வேதமுழுமைக்கும் பொருள்செய்து முடித்தனர். வெள்ளைக்கண்ணாடியால் பார்க்கும்போது சுவபாவரூபமாய்த் தென்படும் பதார்த்தங்களை, பச்சைக்கண்ணாடியால் பார்த்தால் பச்சையாகவும், செகப்புகண்ணாடியால் பார்த்தால் செகப்பாகவுந், தோன்றுவதுபோல, நமக்கு ஞானக்கண்ணாடியாகவுதவும், ஆதியபிப்பிராயத்துடன் வேதத்தைப் படிக்கப்புகில், அதிலெங்கும் அவ்வபிப்பிராயமே தோன்றுமல்லவா?

இதுபற்றிதான் பிரகிருதத்தில் அந்த பாஷியகாரர்களுடைய உதவியன்றி சப்தத்தின்பேரில் பொருளெழுதுகின்றனம். அன்றியும், நம்முடைய மதந் துவைத, அத்துவைத, விசிஷ்டாத்துவைதங்களாகிய மூன்றுபெரும் பிரிவுகளை யுடைத்தாயிருக்கின்றமையால், வேதபாஷியங்களும் மூன்று விதமாக விருக்குமாகையாலும், ஒரு மதத்தாருடைய பாஷியத்தை யனுசரித்து வேதத்திற்குப் பொருள்செய்வோமாகில் மற்ற மதஸ்தர்களுக்கு இசையாதாகையாலும், நமது தேசத்தார் அனைவருக்கும் பொதுவான இந்தப்பத்திரிகையில் ஒருமதத்தையே அவலம்பித்துப் பேசுவது உசிதமல்லவாகையாலும், பலமதத்தாருடைய பாஷியங்களையும் அனுசரித்து இந்தச் சிரியபத்திரிகையில் உரைசெய்து விளக்குவது அசாத்தியமாகையாலும், முற்றும் வேதத்தின் பொருளே தெரியாமையைக் காட்டிலும், அதின் பொருளெல்லாம் ஒருவாறு ஸ்தூலமாய்த் தெரிந்திருப்பது வெகு நலமாகையாலும், நாங்களிவ்வாறு எழுத நிச்சயித்தோம். ஸ்தூலஞ்ஞானந்தெரிந்தபிறகு, எவ்விடத்திலாவது சந்தேகந்தோன்றும்போது, அவரவருக்கு இஷ்டமுள்ள பாஷியத்தின் சகாயத்தால், சந்தேக நிவர்த்திசெய்

துகொள்ளலாம். சிலருக்குச் சந்தேகமே தோன்றுமலிருப்பதும் சாத்தியமே யாகையால், அவர்கள் பாஷியங்களின் சகாயமேயன்றி, தாமாய் சமனுவயம்செய்து, சரியானபொருளை யறிந்துகொள்ளக்கூடும்.

இதுநிற்க, தொடங்கும்போதே பாஷியங்களிலுள்ள கலவரங்களையெல்லாம் சொல்லும்பக்ஷத்தில். கண்ணைக்கட்டி காட்டில் விட்டதுபோலிருக்குமாகையால், கொஞ்சதூரம் மூலத்தைமாத்திரம் மொழிபெயர்த்துச்சொல்லி, பிறகு பொருள்களெல்லாம் குரோடீகரித்துச் சொல்வது உசிதமாயிருக்கும். அதுவரையில் காத்திருக்க மனமிராமல் பாஷியங்களின் சகாயங்களை விரும்புவோர் யாராவதிருக்கும்பக்ஷத்தில், அவர்கள் நவீனபாஷியங்களைப் பார்ப்பதுடன் கூட பிராசீன பாஷியங்களையும், நிருக்திகளையும் பார்த்தால், வெகு திருப்திகரமாயிருக்குமென்றுமாத்திரம் எச்சரிக்கப்படுகின்றது.

நம்முடைய மதத்துக்கு அஸ்திபாரமாகிய வேதங்களும், பாஷியங்களும், நாளுக்குநாள் மலினமாகி, அழிந்துகொண்டுவருவதை நம்மில் எல்லோரும் அறிந்திருந்தும், அவையெல்லாம் அப்படி அழிந்தாலும் அழியலாமேயன்றி; அவற்றை யச்சிடக்கூடாதென்று பலர் ஆக்ஷேபிக்கின்றனர். ஆயினும் நம்முடைய மதம் நிலைபெற்றிருக்க வேண்டுமெனும் கருத்துள்ள விவேகிகள், அப்படி யாக்ஷேபிப்பார்களென்று நாங்கள் நினைக்கவில்லை. ஆகிலும், ஆழமறியாமல் காலிட்டுக்கொள்வது சரியல்ல வாகையால், முன்னுதாய் நம்மவரின் அபிப்பிராயத்தை யறிந்துகொண்டு தொடங்குவது சரியென்று நிச்சயித்தோம்: இல்லாவிட்டால், அளவற்றபொருள் செலவுசெய்து அச்சியற்றிய பிறகு புஸ்தகங்கள் செலவாகாவிட்டால் என்னபயன் கைக்கூடும்? ஆகையால் நம்மவர்களில் இருநூற்றைம்பது பெயராவது எங்களுத்தேசத்தில் கலந்து, எங்களை ஆதரிக்க மனங்கொண்டு, தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பார்களாகில், உடனே அதற்குத்தக்க வேற்பாடுகளைச்செய்ய நிச்சயித்திருக்கிறோம்.

இதையெல்லாம் வேறுபுஸ்தகங்களாக அச்சிடாமல், இந்தப்பத்திரிகையிலே பிரசுரஞ் செய்யக்கூடாதாவென்றால், அந்தக்கிரந்தங்களின் கவுரவத்தை யோசிக்கும்போது, அதை வர்த்தமான பத்திரிகையில் பிரசித்தப்படுத்துவது சரியாய்த் தோன்றவில்லை. வேதத்தின் தமிழ்ப்பொருளையே இதில் அச்சிடுவது சரியல்லவாயினும், விதியில்லாமல் அப்படி செய்யும்படி நேரிட்டது. ஆகிலும் ஸமஸ்கிருதத்திலுள்ள மூலவேதங்களையும், மூலபாஷியங்களையும் இதில் வெளிபிடுவதில் அனேக பாதகங்களிருக்கின்றமையால், நம்முடைய தேச மதாபிமானிகள் தயைசெய்து ஆதரிப்பார்களாகில் அவற்றையெல்லாம் புஸ்தகங்களாகப் பிரசுரஞ்செய்ய நிச்சயித்திருக்கின்றோம்.

## பெண்களுக்குக்கல்வி.

அன்னத்தினால் பசியும், பானத்தினால் தாகமும், நித்திரையினால் அலுப்பும், தீருமென்பதை அனைவரும் ஒப்புக்கொள்வோம். உண்டு குடித்துறங்குவதால் பசியும் தாகமும். சிரமமும் வளருமென்றால், ஒருவரும் ஒப்போமல்லவா? ஒரேகாரணத்தினின்றும் ஒன்றுக்கொன்று நேர்விரோதமான இரண்டுகாரியங்கள் விளையுமெனில், அதை நம்புவது வெகு கடினமாயிருக்கும். ஆயினும் இது புதுமையல்ல. நம்முடைய சுகதுக்கங்களுக்குரிய காரணங்கள் பலவுளவெனினும், நன்றாய் ஆராய்ந்துபார்க்கும் பொழுது, அவற்றில் பெண்களே தலைக்காரணமாய் விளங்கும். அன்னையாய்ப்பெற்றெடுத்து, அன்புடன்வளர்த்துக்காத்து, பெண்டிராயின்பம்தந்து, பெட்டியாய்ப் பொருளைச்சேர்த்து, அடியாளாயுபசரித்து, அறுசுவையன்னமிட்டு, மந்திரியாய் புத்திசொல்லி, மஹிமையை ஓங்கச்செய்து, தோழியாய்த் தொல்லைதீர்த்துத், துணைவியா யுயிரைக்காத்து, மக்களாய்மனமகிழ்த்தி மனிதனுக்குதவிசெய்யும், பெண்களே பேதப்பட்டால், பெருமையைக் கொன்றுவிட்டு, குடிசனைக்கெடுத்துவிட்டுச், கொலைபாதகம்விளைத்து, நண்பரைப்பகைஞராக்கி, நல்லறமெல்லாங்கொன்று, பொருளெல்லாம்பறக்கச்செய்து, பெண்மையை விலைக்குவிற்று, உடல்தனை பளுவாயாக்கி, உண்டியை விஷமாய்ச்செய்து, அறம்பொருளின்பமென்னும், அனைத்தையும் வெறுக்கச்செய்வாள், என்னு மிவ்வுண்மைதனை யறியாரும் உலகிலுண்டோ? மனிதர்வாழ்க்கைக்குப் பொன்னும் பெண்ணே, அவர்மனதுக்குப் புண்ணும் பெண்ணே. ஆகாயத்தை யளவிய விருக்ஷத்தையும், அதின் இலை பூ, கனிமுதலியவனைத்தையும், கடவுளானவர் ஒரு சிறியவிதையில் அமைத்தாற்போல் இக்கருத்துகளையெல்லாம் வெகு மாட்சிமைதங்கிய திருவள்ளுவநாயனார் இரண்டுகுறளிலடக்கி;

“ மனைத்தக்கமாண்புடையா
“ ளாகித்தற்கொண்டான்

" வளத்தக்காள்வாழ்க்கைத்துணை.
" மனைமாட்சியில்லாள்க
" ணில்லாயின்வாழ்க்கை
" யெனைமாட்சித்தாயினும்இல்."

என்று அருளிச்செய்தனர். இதன்கருத்தெ
ன்னவெனில், இல்லறத்துக்கு இசைந்தநற்
குண நற்செய்கைகளையறிந்து நாடித், தன்
கணவனது வரவுசெலவுகளை நன்ருய் சீர்
தூக்கி நடத்தவல்ல மனைவியே வாழ்க்கைக்
குத் துணையாவாளென்பதும்; ஒருவன் அள
வற்ற பொருளும், பேரும். பிரதிஷ்டையும்
பெற்றிருந்தும், மேற்கண்ட தன்மையை யு
டைய மனவிமாத்திரமில்லாவிடின், அவன்
சுகமும், சிறப்பும், புகழுமற்றவனுவானென்
பதுமேயாம். இக்குறள்களின் கருத்தைத்
தீரவிசாரிக்குங்கால், பொருளைச் சம்பாதி
ப்பதொன்றுமாத்திரம் கணவனுக்குத் தொ
ழிலென்றும்; அதைச்சம்பாதித்தபிறகு மு
றையறிந்து செலவுசெய்தலும், தலைகயறிந்
து விருத்திசெய்தலும், இன்னுமுள்ள பல
தொழில்களும் மனைவியைப் பொறுத்ததெ
ன்றும்? இவ்வாறு உலகவாழ்க்கைக்குரிய
தொழில்களெல்லாம் ஆண் பெண்களுக்குப்
பகுத்தளிக்கப்பட்டிருக்கிறதென்றும்; ஆ
ண்தொழில்கள் கடினமுள்ளதாயினும், பெ
ண்தொழில்கள் அவற்றிலும் கடினமான
வையென்றும்; விளங்கும். தகுந்தகாலத்
தையும், கருவியையுங் கொண்டு பொருள்
படைத்தலொன்றுக்கே, இயற்கைச் செயற்
கை யறிவுகள் இன்றி யமையாக்கருவியெ
னக்கருதி, அவ்வறிவுநிமித்தம் நமது பொ
ருளில் பெரும்பாகததைச் செலவழிப்போ
மாயின், இல்லறமின்னதென்றும், அதில்ஆத்
மவிஷயத்திலும், கணவன், மக்கள், நண்பர்,
சுற்றத்தார், உலகத்தார், கடவுள் முதலான
வர்கள் விஷயத்திலும், தனக்குரிய அறன்க
ளும் கடைமைகளும் இப்படிப்பட்டவை
யென்றும், அதற்கியைந்தபடி செலவழித்து
ப் பொருள்காக்கும் வழி இத்தன்மையதெ
னறும்; இப்பொழுது சுகத்தையும், புகழை
யும், இனி நித்தியபதவியையும், ஆனந்தத்
தையும் அளிக்கத்தக்க நல்லொழுக்க மின்
னதென்றும், தேர்ந்தறிந்து, தானும் சுகம
டைந்து, தன்னை யண்டிய கணவன், மக்க
ள், முதலியவர்களுக்கும், சுகத்தைவிளைக்கப்
பெண்களுக்குக் கல்வியே வேண்டியதில்லை
யென்பது யுக்திக்காவது, பிரமாணத்துக்கா
வது, அடுத்திருக்குமாவென்பதை சற்று வி
சாரிப்போம்.

பெண்களைக் கற்பிப்பதினு லடையத்தக்க
ஒப்பற்றபயன்களிற் சிறிதை இப்பத்திரிகை
க்கு இயைந்தவளாயில் விரித்துரைப்பதற்கு
முன், இவ்விஷயத்தில்நம்மவரில் சிலர்செய்
யும் ஆக்ஷேபங்களையெழுதி அவற்றிற்குச் ச
மாதானங்களைச் சொல்வோம். வெகுகாலந்
தொட்டுவந்த பழக்கத்தின் வாசனையைக்
கைவிடமாட்டாத சிலர், முதலில் பெண்க
ளைக்கற்பித்தல் சம்பிரதாய விரோதமென்
றும்; இரண்டாவது, அது அனுவசியகமென்
றும்; மூன்றுவது, அதுசாஸ்திரவிரோதமெ
ன்றும்; நான்காவது, அதினுல் பெண்களின்
ஒழுக்கம் கோணிப்போமென்றும்; இன்னும்
பல பழுதான ஆக்ஷேபங்களைச் செய்வா
ர்களென்பதை யெல்லோருமறிவோம். இ
னி யிவற்றிற்கு முறையே எங்கள் சக்திக்கி
யைந்தவளாயில் சமாதானமுரைப்போம்.

முதலாவது.—நூறு குருடர் கிணற்றில்
விழுந்தார்களென்றால், எல்லோரு மவ்வா
றே செய்யவேண்டுமென்பதற்கு அதுப்பிர
மாணமாகுமோ? அப்படியாயின் கூழ்குடி
த்தவன் மக்கள் சோறுதின்பதும் பழுதாம்.
இதை ஒரு நொடியாவது ஒப்பமாட்டோ
மாகையால், சம்பிரதாயமென்னும் சொகு
சான பதத்திற்கு எவ்விதபொருள்செய்து
நாம் அனுஷ்டிக்கவேண்டுமென்கிற விசார
முண்டாகி, அது ஸத்ஸம்பிரதாயம், துஸ்ஸ
ம்பிரதாயம், என இருவகைப்படுமென்றும்,
அதில் துஸ்ஸம்பிரதாயத்தைதவிர்ந்து, ஸத்
ஸம்பிரதாயததைக் கைக்கொள்ளவேண்டு
மென்றும் நிச்சயிப்போமல்லவா? ஸத்ஸம்
பிரதாய மின்னதென்று அறியப்புகுங்கா
ல், பெரியோர்நடையே ஸத்ஸம்பிரதாயமெ
ன சிலருரைப்பார்; இது சரியான அபிப்பி
ராயமாகில், கிருஷ்ணனுடைய பாலிய சே
ஷ்டைகளைப்பற்றி பாகவதத்தில் நன்ருய்ப்
படித்த பெரியோர்கள் வேசிகளைக்கூடிக்
கெட்டுப்போகும் சிறியோரை துன்மார்க்க
ர்களென்று பழிக்காமல், சன்மார்க்கர்க
ளென்றே புகழ்ந்து கொண்டாடி, அவ்வா
றே அவர்களும் நடக்கவல்லவோவேண்டும்?
அப்படிசெய்ய ஒருவரும் ஒப்பமாட்டாரா
கையால், அப்பதத்துக்கு அர்த்தம் அதுவல்
லவென்று விசிதமாகும். அதின் கருத்து
தானென்னவெனில், வேதசாஸ்திராதி நீதி
நூல்களுக்கு ஒத்துவிரோதமன்றி யுள்ள
ஆசாரமே சிஷ்டாசாரமென்றும், ஸத்ஸம்பி
ரதாயமென்றும், தருமநூல்களுக்கு உரை
செய்த பெரியோர்களனைவரும் ஒருமித்து
முறையிட்டிருக்கின்றனர். இது வேதசாஸ்
திரங்களுக்கு ஒத்திருக்கின்றதோ, இல்லை
யோ, வென்கிற விஷயத்தைக்குறித்து இனி
சர்ச்சிக்கப்படுமாகையால், இப்போது அ
தை யோசிக்கவேண்டாம். இந்த பரதகண்
டமொன்றுதவிர மற்ற தேசங்களெல்லாவ

ற்றிலும், ஆண்பிள்ளைகளைப்போலவே பெண்பிள்ளைகளும் பெரும்பாலும் கல்விப்பயிற்சி செய்கிறார்களென்று சரித்திரக்காரர்கள் சொல்லக்கேட்டிருக்கின்றோம். நமது தேசத்திலும், ஆதியிலிவ்வாறே யிருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. உலகநீதிகளெல்லாம் பாகாய்த் திரட்டித் தாங்களும் அநுபவித்து, அயலாருக்கும்அளித்த, கார்கி, மைத்திரேயி, கோதை, ஔவை வள்ளி, உருவைமுதலிய, மேன்மக்களுடைய நடையே நமக்குப்பிரமாணமாகாவிடின், மற்றெதைத்தான் கொள்ளலாமோ நாங்களறியோம்; உபதேசத்தாலும், அநுஷ்டானத்தாலும், நீதியை நிலைக்கச்செய்த இந்த ஞானத்தாய்களை ஒழுங்குதப்பினவரென்று சொல்ல வியலுமோ? நம்முடைய பெண்கள்அவ்வளவு நற்குண நற்செய்கைகளுள்ளவர்களெனில் போதுமல்லவா?

இரண்டாவது.—பெண்களுக்குக் கல்வி ஆவசியகமல்லவென்பது வெகுபுதுமையாயிருக்கின்றது. நமது நீதிநூல்களில் புருஷர்செய்யும் பாவபுண்ணியங்களுக் கவர்களே பாத்தியஸ்தர்களெனவும், பெண்களின் பாவபுண்ணியங்களில் அவர்களுடைய கணவர்களுக்கும்பங்குண்டெனவும், சொல்லியிருப்பதின் கருத்தைச் சற்றுயோசிப்போமாயின், அவர்களுக்கும் கல்வி அத்தியாவசியகமென்றுவிளங்கும். இல்லறத்திலும், கடினமானது உலகில்வேறில்லையென்பதற்கு நமது அனுபவமே சாக்ஷி. அதைப்பழுதறச்செய்துப் பயன்களேயடைய பெண்களுக்கு விசேஷகல்வியும், ஞானமுமின்றி முடியாது. பெண்களுக்கு இளமையில் பிதாவும், வயதில் கணவனும், மூப்பில் மக்களும், ரக்ஷகரேயன்றி, அவர்களுக்கு சுவாதந்திரியமில்லையென்று மனுமுதலிய ரிஷிகள் விதித்திருக்கிறபடியாலும், ஸ்திரீகள் சபலைகளென்று எல்லோராலும் கொள்ளப்பட்டிருக்கிறபடியாலும், அவர்கள் தாமே கல்வியைப்பயில முடியாதென்றும், அவர்களுடைய நல்லறிவினால் விளையக்கூடிய பயன்களை அடைய நாம் விரும்புவோமாயின், அவர்களுக்கு அறிவைப்புகட்டுவது நமது விலகாக்கடமையென்றும் நாம் கொள்ளவேண்டியது. நம்முடைய கவிகளிற் சிலர் ஸ்திரீகளுக்கு சர்ப்பத்தை யுபமானமாய்ச் சொல்லியிருக்கின்றனர். வரகவிகளுக்கெல்லாம் சிரேஷ்டராகவும், இங்கிலாண்டுதேசத்தாருக்கு சிரோபூஷணமாகவும், அவர்கள பாஷையின் சிறப்புக்குப் பிதாவாகவும், வந்துதித்தஷேக்ஸ்பியர் என்பவர் ஹாம்லெட்டு என்னும் நாடகத்தில், ஸ்திரீகள் சபலைகளென்றுசொல்வது போதாதெனநினைத்து, "சபலையே உன்பெயர் ஸ்திரீ" என்றருளினார். அநிஷ்டநிவாரணத்துக்காகவே முறிமருந்துகளைச் சேர்த்து, விஷத்தையும் பயன்படுத்துவோமாகில், இஷ்டசித்திக்காக பெண்களுக்குக் கல்வியுண்டாக்கவேண்டாமா? இந்த இல்லறமாகிய கடலில் மேடுபள்ளம், சுழல்நீரோட்டம், அலை, பிசல்முதலிய, பலஇடையூறுகளுண்டென்பதற்கு, சாக்ஷியாக "ஸம்ஸாரஸாகரம்கோரம்" என்று பெரியோருரைத்திருக்கின்றனர். இக்கடலில் சஞ்சரிக்க நமக்குக் கப்பலாயுதவும் பெண்களுக்கு வழிகாட்ட அறிவெனும் மாலுமி இல்லாவிட்டால், நாம் கரையேறுவதும் சாத்தியமோ? கண்ணில்லாமாட்டைக் கடல் நோக்கிப்போவென்று கொன்றாலும், போக அதற்கியலுமோ? அவ்வாறுகொல்வதிலும் கொடியபாவமுண்டோ? உலகில் பெண்களொடுக்கமாட்டாத சுமையாகிய இல்லறத்தை அவர்கள் தலைமீதுவைத்துவிட்டு, அவர்கள் அதை ஒருவாறு செலுத்தவும், இன்றியமையாக்கருவியாகிய கல்விப்பொருளைத் தராவிடில், அவர்களைக்கொண்டு நாம் என்னபயனையடையக்கூடும்? பெண்களைக் கற்பிப்பதினால் உண்டாகத்தக்க பயன்களைக்குறித்துப் பின்னால் பிரசங்கிக்கப்படுமாகையால், பெண்களுக்குக் கல்வியைக்காட்டிலும், அவசியமான பொருள்வேறொன்றும் யில்லையெனத் தானாய் விளங்கும்.

மூன்றாவது.—இனி இது வேதசாஸ்திராதிகளுக்கு ஒத்ததா, அல்லவா வென்பதைப் பார்ப்போம். பெண்கள் கற்கவேகூடாதென்று வேதத்தில் எவ்விடத்திலாவது, நிஷேதமிருப்பதாய்த் தோன்றவில்லை. ஏனெனில், கார்கி, மைத்திரேயி, தரந்தி லோபாமுத்திரா முதலிய அனேகஸ்திரீகள், தாங்களும் வேதத்தை அத்தியேனம்செய்து இதராளுக்கும் மந்திரோபதேசங்கள் செய்ததாய்வேதத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அல்லாமலும் யக்கியாதிக்கிரதுக்கள் செய்யுங்கால், அவற்றைச்செய்பவருடைய மனைவிகள் வேதவாக்கியங்களை இப்போதும் உச்சரித்து வருகிறார்களென்பதை யெல்லோரும் அறிந்திருக்கிறோம். ஆகையால் இதற்குவேதத்தில் நிஷேதமில்லையென்றும், இது வேதமறிந்த சிஷ்டாசாரமாயிருக்கிறதென்றும் ஏற்படும். வேதாத்தியேன விஷயத்திலேயே இப்படியாகில், இதரவிஷயங்களைப் பெண்கள் படிப்பதற்கு என்ன ஆக்ஷேபமிருக்கலாம்? சாஸ்திரத்திலாவது பிரபல நிஷேதமுண்டா வென்பதைப் பரிசோதிப்போம். "நஸ்திரீ சூத்திரௌ வேதம் தீயா

தாம், "எனசூத்திரக்காரர்விதித்திருக்கிறார். பிரமாணங்களின் கவுரவதாரதம்மியங்களை யோசிப்போமாயின், வேதம் சர்வோத்கிருஷ்டமானதென்றும், மற்றதெல்லாம் அதற்குத் தாழ்ந்ததென்றும், வேதத்தைமாற்றவாவது, பூர்வபக்ஷமாக்கவாவது, யாருக்கும் அதிகாரமில்லையென்றும், அனைவரும் ஒத்துக் கொள்ளுவார்கள். அப்படியிருக்க, வேதத்தாலே ஆமோதிக்கப்பட்டிருக்கிற ஆசாரத்தைமாற்ற சூத்திரக்காரருக்கு அதிகாரமுண்டாமென்பதைசற்று யோசிக்கவேண்டும். அப்படியே ஒத்துக்கொண்டபோதிலும், அந்த நிஷேதவாக்கியத்தின் கருத்தென்னவென்றுபார்ப்போம். ஸ்திரீகளும் சூத்திராளும் வேதத்தை அத்யேனம்செய்யக்கூடாதென்பதுமாத்திரம் அதின்கருத்தேயல்லாமல், அவர்களுக்குமுற்றும் கல்வியேகூடாதென்பதல்ல. இதற்குமுற்காலத்து ஆசாரமே நிதர்சனமாயிருக்கிறது. வைஷ்ணவர்களுடைய ஆழ்வார்களிலும், சைவாளுடைய நாயன்மார்களிலும், பறையர்முதலிய சகல வர்னத்தாருமிருக்கிறார்களென்றும், அவர்கள் சகலகலைகளையும் கற்றதுமன்றி, தங்கள் ஞானத்தை புத்தகங்களாயெழுதி, உலகத்தாருக்குப் பயன்படுத்தினார்களென்றும், எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறோம். அளவற்ற நூல்கள் ஸம்ஸ்கிருதபாஷையிலிருக்கையில், அவற்றை மறுபடி தமிழில் செய்வானேனெனில், ஸம்ஸ்கிருதபாஷையைக் கற்காத, ஸ்திரீ சூத்திராளுக்காகவென்று பெரியோருரைக்கக் கேட்டிருக்கின்றோம். அவர்களுக்காக நூல்களை யெழுதிவிட்டு அவர்கள் படிக்கக்கூடாதென்று நிஷேதிப்போமாயின், அந்தப்புத்தகங்கள் எப்படி பயன்படுமோ தெரியவில்லை. இதைநன்றாய் யோசிக்கையில், ஒருவன் வாயைத்தைத்துவிட்டு வேண்டியவரையில் உண்ணும்படி அனுமதிப்பதுபோலும், கடைசியாக, மேற்கண்ட வாக்கியத்தினால் உண்டாகும் நிஷேதம், ஸ்திரீ சூத்திராளிருவருக்கும் சமமாய் அனுவயிக்கவேண்டியிருக்க, பிராம்மணாளுக்குச் சமமாய் கல்விப்பயிற்சிசெய்யச்சூத்திரனை அனுமதித்து, ஸ்திரீகள்விஷயத்தில்மாத்திரம் ஆக்ஷேபிப்பது எவ்வளவு நியாயமோ தெரியவில்லை.

நான்காவது.—கல்வியினால் பெண்கள் நடைகோணுமென்பது எந்த ஹேதுவைப்பற்றியோதெரியாது. அவர்கள் நல்லொழுக்கத்தைவிட்டுப்பிசகிநடப்பது தெரியாமையாலாவது, மனப்பூர்வமாயாவது, இருக்கலாம். அவர்களுடைய தெரியாமைக்கு நாமேகாரணமாகையால் அவர்களை நிந்திப்பது சரியல்ல. மனப்பூர்வமாய்ப் பிசகுவதைப்பற்றியோவென்றால், அது அவர்களுடைய சுவபாவத்தைப்பற்றியதா அல்லது கல்வியைப்பற்றியதாவென்று யோசிக்கவேண்டும். கல்வியினால்துர்குணமும்துர்நடத்தையுமே யுண்டாகுமெனில், புருஷர்கள்விஷயத்திலும், அப்படியேயிருக்கவேண்டுமல்லவா? அப்படியெனில் நாமும் கல்வியைக் கைவிடவேண்டுமே? "கண்ணுடையரென்பவர் கற்றோர், முகத்திரண்டு புண்ணுடையார்கல்லாதவர்" எனத்திருவள்ளுவ நாயனாருரைத்ததையும், பழுதாயல்லவா கொள்ளவேண்டும்? கோதை, ஔவை, முதலிய ஞானத்தாய்களெல்லாம், கல்வியினால் கற்பிழந்தார்களெனக் கூடுமாகில், அப்போது அதைச் சற்றுயோசிக்கவேண்டியதுதான். ஆனால் பிரகிருதத்தில் வேசிகளிடத்தில் கல்வியிருப்பதால் சம்சாரிகளுக்கு அதுயோக்கியமல்லவென்போமாகில், வேசிகள் உண்கிறார்களென்கிற ஹேதுவைப்பற்றி நாம் உணவைவிட்டுப் பசித்துச் சாகவேண்டுமல்லவா? கல்வியாலும் சீரடையமாட்டாத துஷ்டசுவபாவத்தையுடைய சிலர் உலகத்திலிருப்பது சாத்தியமே. அத்தன்மையானவர்களிடத்தில் கல்வியிருக்கக்கண்டு அவர்கள் துர்நடத்தைக்குக் கல்விதான் காரணமென்பது, காக்கையேறப் பனம்பழம் விழுந்தபடியால், காக்கையைச் சுடவேண்டுமென்பதுபோலும். ஆனால் கல்வியினால் கெட்டநடத்தைமாறுதெனில் அதிருந்தென்ன, இல்லாவிடிலென்னவென்றாலோ, கல்விப்பொருளிருந்தால் ஒருவேளை யில்லாவிட்டால் மற்றொருவேளையிலாவது, தங்கள்செய்கையின் தன்மையையறிந்து அச்சமுற்றுஅனுதாபப்படுவார்களல்லவா? இதுநிற்க நற்குண நற்செய்கைகளையறிந்து அதற்குத்தக்கபடி நடக்க மனமுடைய பெண்கள் பலருளரென்பதில் சந்தேகமில்லை. அவர்களுக்கத்தன்மையான மனமிருந்தும் கல்வியென்பதே யில்லாவிடின் நற்குண நற்செய்கைகளின்னவையென்றும், அவற்றைப் பெறும்பொருட்டு அனுசரிக்கவேண்டிய மார்க்கமின்னதென்றும், அறிந்துகொள்ளவழியில்லாமல், கடவுளின் கருணையால் கிடைத்த நல்லமனமும் பயன்படாமற்போகுமல்லவா? கடைசியாக கல்வி கற்பதினால் பெண்கள் ஆண்பாலைமதிக்காமல் கர்வத்தையும், அஹங்காரத்தையும் அடைவார்களென்றும், அவர்களுக்குக் கெட்டசிந்தை யிருக்கும்பட்சத்தில் அதை முடித்துக்கொள்ள சுலபமான மார்க்கமேற்படுமென்றும், இன்னும் பல சில்லறை ஆக்ஷேபங்கள் செய்யப்படுகிறது. சுவபா

வத்தில் கர்வமும் அஹங்காரமுமில்லாதவர்களுக்குக் கல்வியாலதுண்டாகுமென்பது நம்பிக்கைக் கெட்டவில்லை. இந்த ஆக்ஷேபம் ஆண்பிள்ளைகள் விஷயத்திலும் அனுவயிக்கவேண்டுமல்லவா! கைநாட்டுப் போடுங்கணவனுக்குக் கற்றுணர்ந்த பெண்டீராவதில்லாவிட்டால் சம்சாரமெப்படி நடக்குமோ தெரியவில்லை. கற்றுணர்ந்தவள் கள்ளபுருஷனுக்கு கடிதமெழுதுவாளென்பது ஒரு ஆக்ஷேபமாகுமோ? கள்ளபுருஷனைத்தழுவதில் குற்றமில்லைக் கடிதமெழுதுவதில்தான் குற்றமென்று சொல்லக்கூடுமோ? இப்போது கல்வியில்லாதவரெல்லாம் கற்புடனே யிருக்கிறார்களென்றுவது, முன்கற்றவரெல்லாம் கற்பிழந்திருந்தார்களென்றுவது, யாராவது சாதிக்கமாட்டுவார்களா? கற்றுணர்ந்தவர் தங்கள் துஷ்டசிந்தையைக் கடிதத்தில் எழுதுவார்களென்பதை நம்பக்கூடவில்லை. இயற்கையிலே புருஷர்களைக்காட்டிலும் பெண்கள் அதிகபுத்திசாலிகளென்பதற்கு ஒருதிருஷ்டாந்தம் கூறுவோம். புருஷனுக்கு வயதுவந்து கல்வியைக்கற்று சம்சாரபளு தலையில் விழுந்தபிறகுகூட யுக்தாயுக்த மின்னதென்றும், தன்மானம் பிரமாணமின்னதென்றும், அவன்அறிந்துகொள்வது அருமையா யிருக்கையில் பெண்கள் தன்நாட்டையும், பெற்றோரையும், பிறந்தோரையும்விட்டு, அதிபாலியத்தில் அன்னியர்குடும்பத்தில் புகுந்தஉடனே, அதிலுள்ள பலருடைய அந்தஸ்துகளையும், தமதுகடமைகளையும், நன்றாய்அறிந்துகொண்டு அவர்கள் மனம்கோணாது நடந்துகொள்ளுந்திறமை யவர்களுக்குண்டாகின்றது. இவ்வளவு அறிவுடையவர் பாபவசத்தால் அவர்களை நாடிய துஷ்டசிந்தைகளை அயலாரறியாமல் அபினயத்தால் முடித்துக்கொள்ளக்கூடுமாயிருக்க, அயலாருக்குத்தஸ்தவேஜாயுதவும்படி கடிதம்எழுதும் அசாதுரியமுண்டாகுமென்பது எவ்வளவுயுக்திக் கொத்திருக்கின்றதோ தெரியவில்லை. கடைசியாக மனத்திற்கற்பில்லாதவளுக்குக் காவல் வைத்தும் பயனில்லை. கற்புடையவளுக்குக் காவலே வேண்டியதில்லையென்று எக்காலத்திலும், எத்தேசத்திலும் கொள்ளப்பட்டிருப்பதற்கு, நிதர்சனமாக "காக்கவேண்டிய கற்பு காசுக்கு முதவாதென்று" இங்கிலீஷார்பழமொழியும் "சிறைகாக்குங்காப்பவன் செய்யுமகளிர், நிறைகாக்கும் காப்பேதலை" என்று திருவள்ளுவநாயனார் குறளுமிருக்கின்றது.

இந்தச் சமாதானங்களைச் சாங்கமாயுரைக்கத்தொடங்கில் இது ஒரு பெரிய புத்தகமாய் முடியுமாகையால், இது ஒருவாறு சுருக்கி எழுதப்பட்டது. பெண்களைக் கற்பிப்பதினால் விளையத்தக்க ஒப்பற்ற பயன்களையும், அவர்கள் கற்கவேண்டிய நூல்களையுங் குறித்து, வருகிறபத்திரிகையில் விசாரிக்கப்படும்.

---

## தெய்வபக்தியாலுண்டாகும்சுகம்

**மா**னிடஜன்மம் ஒருவிதத்தில் சிறந்ததாயினும் பலவிதத்திலுந் துன்பத்திற்கு இடமாயிருக்கின்றது. ஒவ்வொரு நிமிஷமும் பல இடையூறுகளால் சூழப்பட்டிருக்கின்றது. எந்தப்பக்கத்திலும் அபாயமே தென்படுகின்றது. எண்ணிறந்த எதிர்பாராததுன்பங்களால் வெகு சாக்கிரதையாக வாழ்ந்திருக்கும் மனிதனும் சுகமிழந்து துக்கத்தையடைவான். இவற்றை முன்னறியவுஞ் சக்தியில்லை. அறிந்தாலும் அவைகளைத் தடுப்பதும் சுலபசாத்தியமல்ல.

இவ்வளவுதுன்பத்துக்கு ஆளாயிருந்தும், நம்மை வருத்தக்கூடிய சுகதுக்க ஹேதுக்களையும் நீக்க சர்வவல்லமையுள்ள கடவுள் ஒருவர் உண்டென்றும் நம்பிக்கையினுலல்லவோ நாம்நிச்சிந்தையாகச் சீவித்துவருகிறோம்? நாமிவ் வுலகத்தில் அனுபவிக்கும் சுகசந்தோஷாதிகளுக்கு நமது கஷ்ட நிஷ்டூரங்களை எல்லாம்அறிந்து, நம்மை இரக்ஷிக்கக் கடவுளிருக்கின்றார்என்னும் நம்பிக்கையேயல்லவா முக்கியகாரணமா யிருக்கிறது?

அளவிறந்த ஞானமும், நன்மையுங்கூடிய கடவுளிடத்து, அற்ப மானிடராகிய நாம் செலுத்தவேண்டிய விசேஷ கடமை யாதெனில், அவரிடத்தில் சர்வதா நம்பிக்கை வைத்து நமது சுக சந்தோஷாதிகளின் சித்திக்கும், நமது கஷ்ட நிஷ்டூரங்களின் நிவர்த்திக்கும், அவருடைய பரமகிருபையே காரணமென்று மனோ நிச்சயஞ்செய்து நடந்துகொள்வதேயாம்.

இந்த மனோ நிச்சயமுடைய புருஷன் மற்றவர்களைப்போல மானிடஜன்மத்துக் குரித்தாயிருக்கும் தோஷங்களாலும், லோபங்களாலும் பீடிக்கப்படுவதில்லை. தன் குற்றங்களையும், பலஹீனத்தையும் பூர்த்தியாக வறிந்திருந்தபோதிலும், தன்னைபாவிக்கவும், தனது நன்மையை பாராட்டவுங் கிருபைசெய்யாநின்ற, கடவுளுடைய கல்வியாண குணங்களைச் சிந்தித்து தைரியமடைவான்: நாளைவருவதை இன்றறிய தனக்கில்லாதிருந்தும், கடவுள் சர்வக்கியர் என்பதை நினைத்து ஊக்கமடைவான். தனக்கு

ஆதரவாயிருப்பவர், சர்வ வல்லமையுடையவராதலால், தன் பலஹீனத்தை நினைத்து துக்கம் பாராட்டமாட்டான். இவ்வாறு பரமாத்மாவிடத்தில் நம்பிக்கையுள்ள வுத்தமன் அவருடைய திருஞானத்தால் தனக்கு ஞானமும், அவரது வன்மையால் தனக்கும் வன்மையும், அவருடைய ஆநந்தத்தால் தனக்கு ஆநந்தமும், தேடிக்கொள்ளுகிறான். அவரது திருக்கல்லியாண குணங்களின் ஒவ்வொன்றின் பயனையும் அடைந்து அவரது சர்வ பரிபூர்ண சாகரத்தில் மூழ்கி அபூர்ணமாகிய தனது சிற்றுடலை மறக்கின்றான்.

இவ்வாழ்க்கை சுகவேதுவா யிருக்கும் பொருட்டு நம்மை யாதரித்து இரக்ஷிக்குங் கடவுளை நம்புவதன்றி வேறொரு சாதனங்களுமில்லை. இந்த நிச்சயமில்லாவிடில், நமது வாழ்க்கை துக்கசாகரமாக முடியும். அன்றியும், கருணாநிதியாகிய கடவுள் நமக்கு இவ்வளவு நன்மை பயக்கின்ற இதையும் நாமவருக்குச் செலுத்தவேண்டிய கடமைகளி லொன்றாகக் கொள்வோமாகில், எவ்வளவு சகாயம்!

இவ்வாறு நாம் கடவுளை நம்புவதற்குப் பலமுகாந்தரங்களிருப்பினும், சிலவற்றைமாத்திரம் இவ்விடத்திற் கூறுவோம்.

முதன்மையானவும், முக்கியமானவும் முகாந்தரம் யாதெனில், அவர் நம்பினவரைக் கைவிடுவதில்லையென்று வேத சாஸ்திரங்கள் முறையிடுகின்றனவென்பதே.

மேலும், இதினால் நமக்கு பரத்திலுண்டாகும் பேரானந்தத்தை யோசிக்காவிடினும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இவ்வுலகத்தில் பிரத்தியக்ஷமாக விளையாநின்ற பலனைப் பாரிக்கவேண்டாமோ? சர்வரக்ஷகராகிய கடவுளிடத்தில் நம்பிக்கை வைப்பதினால் நமக்கு நேரிடுந் துன்பங்களை நீக்கவும், தைரியத்துடன் சகிக்கவும் சக்திஉண்டாகின்றது. தன்பக்கத்தில் தனக்குச் சகாயஞ்செய்ய ஒரு சிநேகிதன் உண்டாயிருப்பானேயாகில், மனிதன் தன்சுபாவசக்திக்கு மிஞ்சி முயலுவான் என்பதும், சகாயமில்லாதபக்ஷத்தில் உள்ள தைரியத்தையும் இழந்து பலஹீனனாவானென்பதும் சத்தியமல்லவோ? தேவானுகூலம் பெற்ற பல போர்வீரர் தங்கள் ஊக்கத்தினாலே தானே வெற்றியடைந்திருக்கிறார்கள்? அதுபோலவே தெய்வத்தினிடத்திலுள்ள நம்பிக்கையால் பொறுமை, ஊக்கம், உற்சாகம், முதலிய சற்குணங்கள், நம்மிடத்திலுண்டாகி, நம்மால் நிவர்த்திசெய்யக்கூடாத துன்பங்களின் பலத்தை யொடுக்கும்.

இந்த சற்குணம் நமது தரித்திரதசையிலும் துக்கதசையிலும் நமக்கு விசேஷ திருப்தியையும், சந்தோஷத்தையும் உண்டாக்கும். மேலும் நமது ஆத்மா இந்த சரீரத்தைவிட்டுப் பிரிந்து வேறோருலகத்தை நாடி இதுவரையிலுங் காணாத காக்ஷிகளைக் காணவும் இதுவரையிலும் பேசாதவருடன் பேசவும், இதுவரையிலும் அனுபவியாத சுகங்களை யனுபவிக்கவுஞ், சொல்லத்தத்தளிக்கும்பொழுது சுபாவமாயுண்டாகும் அச்சமும், கவலையும், பயமும், மனநடுக்கமும்பாதிக்க, நமக்கு ஒருவாறு தைரியத்தை யுண்டாக்குவதற்கு நம்மை நமது வாழ்நாள்முழுதும் கருணையுடன் இரக்ஷித்தப்பிரரும், கைசோரவிடாமல் காலாந்தமளவுந் துணைநின்று காப்பவராகிய கடவுளிடத்தில் நமக்குள்ள நம்பிக்கை தவிர வேறொன்று காரணமாமோ? இக்கருத்து அமையும்படி திருவள்ளுவநாயனார்.

“மலர்மிசையேகினான் மாணடி சேர்ந்தார்
“நிலமிசை நீடுவாழ்வர்.

“தனக்குவமையில்லாதான் தாள்சேர்ந்தா
“ர்க்கல்லான், மனக்கவலைமாற்றலரிது.

“வேண்டுதல்வேண்டாமை இலானடிசேர்ந்
“தார்க் கியாண்டும் இடும்பையில.”

என்று அருளிச்செய்தனர்.

---

## அர்த்தசாஸ்திரம்.

### சொத்து-சுவத்துவம்.

பொன் வெள்ளி முதலிய லோஹங்களை விரும்புவோர் வெகு சிரமப்பட்டு பூமியிலுள்ள கனிகளை வெட்டியெடுத்து உருக்கி உருப்படுத்தவேண்டியும்; உண்பண்டங்களை யடைய நிலத்தை உழுது விதைவிதைத்துக் களைபிடுங்கி இன்னும் பலவாறாக வருத்தப்படவேண்டியும்; உடுப்புகளுக்காக இவ்வாறேமுயன்று பஞ்சுண்டாக்கி நூல்நூற்று துணி நெய்யவேண்டியும் இருக்கின்றபடியாலும்; இன்னு மிவ்வாறே நம்முடைய ஆவசியக, ஆனுகூலிய, போகாதிகளுக்கு உதவத்தக்க பண்டங்களில் பெரும்பாலும், உழைப்பன்றி கிடைக்கமாட்டாதாகையால், முதலெடுப்பில் சகலதிரவியங்களி னுற்பத்திக்கும் உழைப்பேகாரணமென்றுதோன்றும். ஆகிலும் திரவியோத்பத்திக்கு உழைப்பு முக்கியகாரணமாகிலும், உழைப்புள்ள விடத்திலெல்லாம் திரவியமுண்டாக வேண்டுமென்கிற ஆவசியகமில்லை. முற்றும் நாகரீகமற்று மிருகத்தன்மையையுடைய ஜனங்கள்

நம்முடைய படியாள்களைக்காட்டிலும், பலவாயிரம்பங்கு அதிகமாயுழைத்தும், உண்ண உணவும், உடுக்கத்துணியும், இருக்கவீடுமின்றி என்றும் வருந்துவார்கள். மிருகப்பிராயமானவர்கள், உணவுநிமித்தம் செய்யவேண்டிய துன்பம் தரும் நெடுந்தேச சஞ்சாரத்தையும், அதிசுபாயமான குடிசைகளைக்கட்டுதல், அதி சாதாரணமான ஆயுதங்களைச்செய்து கொள்ளுதல் முதலிய சகல தொழில்களிலும், நேரிடத்தக்கப் பிரயாசத்தையும் யோசிக்கையில், அவர்களுடைய உழைப்புக் கங்குகரையுமின்றி வளரவேண்டுமல்லவா? உழைப்பே மனிதனுக்குத் தலையெழுத்தாம். அவன் நாகரீக முற்றவனாயினும், அற்றவனாயினும், முகத்துநீர் மூக்கால்வடிய உழைத்தாலன்றி அவனுக்குணவுகிடையாது. நாகரீக முடையவர்களுடைய சீருக்கும், செல்வத்துக்கும், காரணமாகிய உழைப்பே நாகரீகமற்றவனுக்கு உணவும் கொடுக்காமல் வஞ்சிக்கின்றதே, இதென்னபுதுமையென்று சிலர் கேழ்க்கலாம். இதற்கென்ன காரணமெனில், நாகரீகமற்றவர்கள் பசிதாகாதிகளால் வருத்தப்பட்டபொழுதும், அவற்றிற்கு திருப்தியளிக்கத்தக்க அதி சாதாரணமான பண்டங்களைச் சம்பாதிப்பதிலும், நாகரீகமுள்ளவர்களைப் போலத்தகுந்த கருவிகளைக்கொண்டு சிரத்தையுடனும் உற்சாகத்துடனும் உழைக்காது, தாகமெடுக்கும்போது கிணருவெட்டிக் கொள்ளலாமென்று சொம்பலே உருக்கொண்டுவந்தாற்போல், அதிஜட–சார்வபவுமர்களாயிருப்பார்கள். ஆதலால் அவர்கள்சோம்பல் தேயவும் உழைப்பு ஓங்கவும், உதவும் கருவிகளைத்தேடி யனுசரித்து வாழும்படி செய்யவேண்டும். மனிதரொல்லாம் இயற்கையில் சோம்பேறிகள். உழைப்புக்குப் பிரயத்தனமும், யத்தனத்துக்கு உத்தேசியமாக தகுந்தப்பிரயோஜனமும் ஆவசியகமாகும். நாகரீகமுள்ள நாடுகளில் ஓங்கும் உழைப்பானது கல்விப்பொருளின் பயனாம். நமது உயிர்வாழ்க்கைக்கு ஆவசியகமாயுள்ள பண்டங்கள்மாத்திரமேயன்றி, ஆனுகூலியத்துக்கும் போகத்துக்கும் உதவத்தக்கனவாய் நம்மைச்சூழ்ந்திருக்கும் நானாவிதபொருள்களையும், அடையவேண்டுமெனும் விருப்பமே அவர்களின் சிறப்புக்குள்ள உழைப்பிற்குக் காரணமாம். ஒருவனின்று வெகுப்பிரயாசப்பட்ட போதிலும், அப்பிரயாசத்தின் பயனாகிய, போகானந்தங்களை நினைக்குந்தோறும், அவற்றிற்குக் காரணமாகிய பரிசிரமத்தை மேல்மேலும் மனக்களிப்புடனும், அக்கறையுடனும், மேற்போட்டுக் கொள்ளுகிறான். நாகரீகமற்றவர்களோ வெனில், தாத்காலிக ஆவசியகங்களைச் சம்பாதித்துக் கொள்வதைக்காட்டிலும், தூரதிருஷ்டியில்லாமலும், ஆனுகூலியங்களையும், போகங்களையும் அனுபவிக்கவேண்டுமென்கிற விருப்பங்களை விளைக்கத்தக்க பண்டங்களாற் சூழப்படாமலும், அவர்களாவியை வருத்தும் பசிதாகாதிகள் தீர்ந்தவுடனே நாளையென்பதொன்றிருப்பதாய் மனதிற்கொள்ளாமல், உறக்கமுற்று உலாவித்திரிகின்றனர். பசிதாகங்கள் தீர்ந்தால் வேறொருகுறையும் இல்லாதவராயிருப்பார்களாகில், அவர்களைக்காட்டிலும், சுகிகளிருப்பது சாத்தியமோவெனச் சிலர் சங்கிக்கலாம். முற்றும் அறிவின்மையே மேலிட்டு, சுகதுக்கஞானமேயற்று உதாசீனமாகிய மிருகத்தன்மையை, திருப்தியுள்ளதென்றாவது, சுகமுள்ளதென்றாவது, சொல்லவியலுமோ. இதினால்தான், டாக்டர்–கோல்ட்–ஸ்மித்து, என்னும் கவியானவர், டிராவலர்என்கிறகாவியத்தில்,

“உள்ளத்தைவருத்தும்
ஒவ்வொருகுறையும்,
“தள்ளுண்டபின்னர்
சுகத்துக்கரிவியாம்.”

என்று உரைத்தனர்.

இதுநிற்க நாகரீகமற்றவர்கள் இவ்வித உதாசீனமான ஸ்திதியிலிருப்பதுகூட வெகு அருமையாயிருக்கும். முற்றும் நாகரீகமற்றதேசங்களில் யாத்திரை செய்தவர்களெழுதிய சரித்திரங்களைப் படித்துப்பார்ப்போமாகில், அவர்களைக்காட்டிலும், நம்முடைய பண்ணையாள்கள் பலமடங்கதிகசெல்வமும் சிறப்பும், போகமும் முள்ளவர்களென விளங்கும். இப்படிப்பட்டதேசத்தில் நாகரீகமுள்ள சிலர் குடியேறி அவர்களுக்கு சவுக்கியமான குடிசைகளைக் கட்டவும், மழைகாலத்துக்கு உணவுமீத்தவும், வில்லம்புகளைச்செய்துகொள்ளவும், இன்னும் இவ்வாறான உயிர்வாழ்க்கைக்கு ஆவசியகமான தொழில்களைக் கற்பிப்பார்களாகில், அந்தக்கல்வியின் பயனை யனுபவிக்கும் சிலர்கண்டு, அவர்களைச் சுற்றிலுமுள்ள இயற்கைச்சோம்பேறிகள் பொறாமைகொண்டு, பலாத்காரமாயாவது, கபடமார்க்கமாயாவது, அவர்கள் வெகு சிரமப்பட்டடைந்த பொருள்களைப்பறித்துக்கொள்ள முயல்வார்களாகையால், கஷ்டப்பிராணிகள் தாங்கள் படைத்த பொருள்களைமாத்திரமேயன்றி, தங்களுயிரையும் இழக்கும்படி நேரிடும். ஆகையால் சொத்துக்களின் ரக்ஷணத்துக்கு சட்டதிட்டங்களாவசியகமாகும்.

ஆனால் இயற்கையில்கடவுளால் படைக்கப்பட்ட சகலமும், மனிதருக்கெல்லாம்பொ

துவானதாகையால், இன்னது இன்னாருதென்கிற வியவஸ்தை யுண்டாகி, சுவத்துவமென்பது ஏற்பட்டபிறகல்லவா சொத்துக்கு ரக்ஷணம் ஆவசியகமாகும். இவ்வேற்பாடு வெகுகாலத்துக்குமுன் உண்டானபடியால் இக்காலத்திலுள்ளவர்கள் அதை இயற்கையானதாகக் கொள்வார்களேயன்றி, செய்கை ஏற்பாடாக எண்ணமாட்டார்கள். ஒருவன் உழைப்பினால் படைத்தபொருளில் அவனுக்கு பாத்தியமிருக்கவேண்டியது தர்மமாயினும், இயற்கையில் அனைவருக்கும் பொதுவாயுள்ளதைப்பிரித்து ஒருவன் அனுபவிப்பதற்குள்ள பாத்தியம் அந்த தேசத்தின் சட்டசாஸ்திராதிகளால் உண்டாகவேண்டியது, இதற்கு திருஷ்டாந்தமாக பூஸ்திதியைக் கொள்வோமாயின், இன்னின்னதுண்டு இன்னாருதா யிருக்கவேண்டியதென்றும், அவனவன் தன் தன் நிலத்தை புத்திரபவுத்திர பாரம்பரியமாயும், தானாதிவினிமயவிக்கிரயங்களுக்கு யோக்கியமாயும், சுவேச்சையாய் ஆண்டு அனுபவித்துக்கொள்ளக்கூடுமென்றும், இந்த நியமங்களுக்கு விரோதமாய் நடப்பவர்களுக்குச் சிக்ஷையுண்டென்றும் விதிப்பது சட்டதிட்டங்களேயல்லவா? ஆகையால் சொத்தென்பதேற்பட்டு, அதின் ரக்ஷணத்துக்குவேண்டியவிதிகளுண்டாகிறவரையில் சுவத்துவம் ஜனிக்கமாட்டாது.

இதே விஷயம் தொடர்ச்சியாக வருகிற பத்திரிகையில் எழுதப்படும்.

---

## பிரகிருதிசாஸ்திரம்.

சாமான்னிய தர்மங்கள் (தொடர்ச்சி,)

உலகத்திலுள்ள பதார்த்தங்களெல்லாம் முடிவில்லாமல் பாகிக்கப்படும் தன்மைக்கு விபாஜியத்துவமென்றுபெயர். ஒருகல்லை இரண்டாக உடைக்கலாம். அந்த பாகங்கள் ஒவ்வொன்றையும் மறுபடியும் அப்படியே பாகிக்கலாம். இவ்வாறு பாகித்துக் கொண்டுபோனால் அந்தக்கல்லு கடைசியில்மாவாகிவிடும். அந்த மாவை மறுபடியும் பாகித்துக்கொண்டுபோனால், அது திரவமாகிவிடும். அதைஇன்னும் நுட்பமாய் பாகிப்போமாகில், அது கண்ணுக்குத்தெரியாமல் வாயு ரூபமாகிவிடும். இவ்வாறு முடிவின்றி பாகிக்கத்தகுந்த யந்திர சாமக்கிரிகள் கிடைப்பது அருமையேயல்லாமல், இந்த தர்மத்துக்கு அளவில்லை. சாதாரணமாய் அம்மி, யந்திரம், உரல்முதலியவற்றால் கட்டி பதார்த்தங்களை மாவாக்குவதை அறியாதவர் நமது தேசத்திலொருவருமில்லை. ஆனால் திரவமாகவும், வாயுரூபமாகவும், பிரிக்க உதவும் சாமக்கிரிகள் பல உண்டாகிலும், அவற்றை நம்மில் பலரறியார்கள். அவற்றுள் அக்கினியு மொன்றெனு, இனி விவரித்துக்காட்டப்படுமாகையால், இப்பொழுதிவ்வளவு குறிப்பிடுவதேபோதும். இதர சாமக்கிரிகளுடைய சகாயத்தால் வெகு நுட்பமாய் பாகிக்கலாமென்பதற்கோருதாரணம் கூறுவோம். ஒருவிரல் பருமனுள்ள பித்தளைக்கம்பியில் ஒரு அங்குலநீளம் வெட்டிக்கொண்டு அதின்நடுவில் நெடுக்குவாட்டில், ஒரு ஈர்க்களவு பருமனாய் துவாரம்விட்டு, அந்த துவாரத்தில் பொன்னை யுரிக்கிவிட்டு, அது ஆறினபிறகு அந்தப் பித்தளையைத்தட்டி கம்பியாய் நீட்டுவொம். முதலில் அந்த துவாரத்துக்குப் பதின்மடங்கு பருமனுள்ளதாய் அந்தப் பித்தளை யிருக்கும் பக்ஷத்தில், அதைக் கம்பியாக நீட்டுந்தோறும் அவற்றின் பிரமாணம் பேதப்படாதாகையால், பித்தளைக்கம்பி மயிரளவு பருமனாகும்போது, அதற்குள்ளிருக்கும் பொன்கம்பி அதில் பத்திலொருபங்கு பருமனுள்ளதாகும். பிறகு அந்தக்கம்பியை பொட்டிலுப்பு திராவகத்தில் போட்டால், அந்த திராவகம் பித்தளையை தின்றுவிடுமாகையால், பொன்கம்பி மாத்திரம் மீரும். இந்தப் பொன்கம்பி வெறுங்கண்ணுக்குத்தெரியாது. வெகு பலமான பூதக்கண்ணாடியால் பார்த்தால் அது மயிரளவு பருமனுள்ளதாய்த் தோன்றும். இவ்வித கம்பிகளின் உபயோகத்தைக்குறித்து திருஷ்டிசாஸ்திரம்படிக்கும் போதுதெரியும். இவ்வாறு விந்தையாக பதார்த்தங்களைப்பாகிக்குந்தோறும், அவற்றின் பாகங்கள் சிறிதாகி, கடைசியில் வாயுரூபமாகிகண்ணுக்குத்தெரியாமல் போனபோதிலும், அதில் ஒரு பரமாணுவாவது நசித்துப்போயிற்றென்று எண்ணக்கூடாது. ஏனெனில் அப்பிரத்தியக்ஷியமானதெல்லாம் இல்லையென்பது யுக்திக்காவது பிரமாணத்துக்காவது இசையாது. பாகிப்பதனால் பதார்த்தங்களின் பரிமாணம் விருத்தியாகும். இதற்கு திருஷ்டாந்தமாக ஒருகிச்சிலிப்பழத்தை இரண்டாக அறுத்தால் அதற்கு முன்னிருந்த உருண்டையான உபரிதலம் (என்றால் மேல் புறம்) தவிர இரண்டு வட்டவடிவான உபரிதலங்கள் உண்டாகும்; இந்த ஒவ்வொரு பாதியையும் இரண்டாய்வெட்டினால், முன்னிருந்ததைக்காட்டிலும் அரை வட்டவடிவான நான்கு உபரிதலங்கள் அதிகமாயுண்டாகும். இவ்வாறே பாகிக்குந்தோறும் பரிமாணம் விருத்தியாகிக்கொண்டேவரும்.

சிருஷ்டியிலுள்ள பதார்தங்களில் நிலையாயுள்ளவை தாமாய்ச் சலிக்கவாவது சலிப்பவை தாமாய் நிற்கவாவதுமாட்டாது. இந்த

தர்மத்துக்கு ஜடதத்துவமென்று பெயர். பதார்த்தம் சலித்துக்கொண்டிருக்கும் நிலைமைக்கு சராவஸ்தை யென்றும், நிலையாயிருக்கும் நிலைமைக்கு ஸ்திராவஸ்தையென்றும் பெயர். சராவஸ்தையிலுள்ள பதார்த்தங்களை நிற்கும்படியாவது, ஸ்திராவஸ்தையிலுள்ளவற்றை அசையும்படியாவது செய்வதற்குரிய காரணத்துக்கு, இந்தநூலில் பிரேரணையென்று பெயர் வழங்கப்படும். உலகத்திலுள்ள ஜடபதார்த்தங்களில் நிலையாயுள்ளவற்றை அசையும்படிச் செய்ய ஒரு பிரேரணைவேண்டியிருந்தபோதிலும் சலித்துக் கொண்டிருக்கும்பதார்த்தங்கள் ஒருபிரேரணையின் உதவியன்றியே நின்றுபோவதைநாள்தோறும் நாம்பார்த்துவருகையில், அதற்கும் ஒரு பிரேரணை வேண்டுமென்பது வெகு புதுமையாய்த்தோன்றும். ஆயினும் அதுபுதுமையல்ல. ஆகாசவெளியிலுள்ள எண்ணரிய சந்திர, சூரியக்கிரகாதிகளெல்லாம் ஜடபதார்தங்களேயல்லவா? அவை ஒரு நொடிப்பொழுதாவது நிற்காமல், அதற்கு கடவுளால் அளிக்கப்பட்ட நியமப்படிக்கு கிரமமாய் அதற்குறிய மார்க்கங்களில் அநுதினமும் சஞ்சரிப்பதை நாமெல்லோரும் பார்த்திருந்தும், அதற்குக் காரணமென்னவென்னவென்று விசாரிக்காமையால், இப்பொழுது இந்த நியமத்தைக்கேட்டஉடனே புதுமையாய்த் தோன்றுகின்றது. ஆகாசத்தில் சலிக்கும் கோளங்களின்கதிக்குப்பிரதிபந்தமாக யாதொருபிரேரணையும் குறுக்கேவராமையால், அவை சஞ்சரித்துக்கொண்டேயிருக்கின்றன. ஆனால் பூமியின்மேல் ஒரு குண்டை யுருட்டினாலும், ஒருகல்லை ஆகாசத்தில் எறிந்தாலும், அவைமுடிவன்றி சலித்துக்கொண்டல்லவாயிருக்கவேண்டும்? அப்படிக்கன்றி அவற்றின் கதியைப் பிரதிபந்திக்க யாதொரு பிரேரணையுமன்றி, தரையிலுருட்டியது நின்றும், ஆகாயத்தில் எறிந்ததுதரையில் விழுந்தும், விடுகிறதே என்கிற ஆக்ஷேபந்தோன்றலாம். ஆகிலும் அந்த நூலைப்படிக்குந்தோறும், இதற்குச்சமாதானந்தானாய்விளங்குமாதலால இப்போது சற்று சூசிப்பிப்பதே போதும். பூமியை சுற்றிலும் ஏறக்குறைய நாற்பத்தைந்துமயில் உயரம் வரையில் வாயு சூழ்ந்திருக்கிறபடியால், அந்தவாயுவில் சலிக்கும் பதார்த்தங்களின் கதிக்கு அதினால் ஒருதடையுண்டாகிறது. அன்றியும், பூமியின் மேற்புறம் மேடு பள்ளமுள்ளதாகையால், இதினாலும் பதார்த்தங்களின் கதிக்கு ஒரு தடையுண்டாகிறது. இதுதவிர, பூமியின் ஆகர்ஷண சக்தியால் ஒரு தடையுண்டாகிறது. இப்பிரதிபந்தங்களொவ்வொன்றைக்குறித்தும் "இனி தனியாய் விசாரிக்கப்படும்.

சாமான்னிய தர்ம்மங்களில் கடைசியது ஆகர்ஷகத்துவமாம். இந்த தர்ம்மத்தைப் பிரேரணையாக வழங்கும்போது இதற்கு ஆகர்ஷணமென்கிற பெயர்வருமாகையால், எளிதாய் வியவஹரிக்கும்பொருட்டு இவ்விரண்டுபொருளிலும், ஆகர்ஷணமென்கிற பதத்தை நாங்களுமுபயோகிக்கின்றோம். ஒரு பதார்த்தம் மற்றொன்றைத் தன்னுடன் சேரும்படி இழுக்கும்தர்ம்மமே ஆகர்ஷகத்துவம்; அல்லது ஆகர்ஷணமாம். இதுமிசிராகர்ஷணம், சினேஹகர்ஷணம், குருத்துவாகர்ஷணம்என்று மூன்றுவகைப்படும். இவற்றில் மிசிராகர்ஷணம் பதார்த்தவிக்கியானசாஸ்திரத்தைச் சேர்ந்ததாகையால், அதைக் குறித்திவ்விடத்தில் பிரஸ்தாபிக்க வேண்டியதில்லை. மற்ற விரண்டும் வருகிற பத்திரிகையில் விசாரிக்கப்படும்.

---

# ருக்குவேதத்தைச்சேர்ந்த ஐத்திரேயஉபநிஷத்து.

## முதல் அத்தியாயம்.

“முதலில் இவர் (பிருமம்) ஒருவர்மாத்
“திரம் ஆத்மாவாகவிருந்தார். அசைவுள்
“ள வேறு யாதொன்றுமில்லை. உலகங்களை
“சிருஷ்டிப்போமென்று அவர் எண்ணி ஜ
“லம், தேஜஸு, மரணம், அப்புகள், இந்த
“உலகங்களை சிருஷ்டித்தார். ஆகாசத்துக்
“குமேல் ஜலம், ஆகாசம்ஸ்தானம், நடுமண்
“டலத்தில் தேஜஸு, பிரதிவியில் மரணம்,
“அதற்குக்கீழ் அப்புகள், இதுகள்தான் உ
“லகம். (இனி) லோகபாலர்களை சிருஷ்டிப்
“போமென்று அவர் எண்ணினார். ஜலத்தி
“லிருந்தே புருஷனையெடுத்து அவர் உண்
“டாக்கினார். அவனை அபிதபித்தார். அப்படி
“அபிதபிக்கப்பட்டவனுக்கு முட்டைபோல
“வாய்மலர்ந்து, வாயினின்று வாக்கும், வா
“க்கினின்று அக்கினியும் (உண்டாயிற்று.)
“மூக்குகள் மலர்ந்து, மூக்குகள் நின்று
“சுவாசமும், சுவாசத்தினின்று வாயுவும்
“(உண்டாயிற்று.) கண்கள் மலர்ந்து கண்
“கள்நின்று பார்வையும், பார்வையினின்
“று ஆதித்தியனும், (உண்டாயிற்று.) கா
“துகள் மலர்ந்து, காதுகள் நின்று கேள்
“வியும், கேள்வியினின்று திக்குகளும் (உ
“ண்டாயிற்று.) துவக் உண்டாகி, துவ
“க்கிநின்று மயிர்களும், மயிர்களி நின்
“று பூண்டுகளும், செடிகளும், (உண்டா
“யிற்று,) ஹருதயம்உண்டாகி, ஹிருதயத்தி
“நின்று மனதும், மனதிநின்று சந்திர
“னும் (உண்டாயிற்று). நாபிமலர்ந்து, நா
“பியி நின்று அபானமும், அபானத்தி

"ன்று மிருத்தியுவும். (உண்டாயிற்று.) சி
"ருஷ்டிக் கருவியுண்டாகி, சிருஷ்டிக்கரு
"வியினின்று ரேதஸும், ரேதஸினின்று ஜல
"மும் (உண்டாயிற்று.)"
"இப்படி சிருஷ்டிக்கப்பட்ட இந்ததே
"வதைகள் இந்த மகா சமுத்திரத்தில் விழு
"ந்தன. அவனுக்கு (புருஷனுக்கு) பசிதாப
"ங்களை யுண்டாக்கினார். அந்த தேவதைக
"ள் தாங்களிருந் துண்ணும்படி நிலையிடத்
"தைக் காட்டவேண்டுமென்று கேட்டது
"கள். அவர் பசுவைக்கொண்டுவந்தார். எ
"ங்களுக்கு இது போதாதென்றதுகள். அ
"வர் அதுகளுக்குப் புருஷனைக்கொண்டுவ
"ந்தார். "நன்றாய் செய்யப்பட்டதல்லவா"
"என்று அதுகள் சொல்லித்து; ஆகையா
"ல் புருஷன்தான் நன்றாய்செய்யப்பட்ட
"வன். அவரவர் ஸ்தானத்தில் பிரவேசியுங்
"களென்று சொன்னார். அக்கினி வாக்காகி,
"வாயில் பிரவேசித்தது. வாயு சுவாசமாகி,
"மூக்குகளில் பிரவேசித்தது. ஆதித்தியன்
"பார்வையாகி, கண்களில் பிரவேசித்தது.
"திக்குகள் கேள்வியாகி, காதுகளில் பிரவே
"சித்தது. பூண்டு மரணங்கள் மயிர்களாகி,
"துவக்கில் பிரவேசித்தது. சந்திரன்மன
"தாகி, ஹிருதயத்தில் பிரவேசித்தது. மர
"ணம் அபானமாகி, நாபியில் பிரவேசித்த
"து. ஜலம் ரேதஸ்ஸாகி, சிருஷ்டிக் கருவி
"களில் பிரவேசித்தது பசிதாகங்கள் அவ
"ரைப்பார்த்து (இடம்) காட்டுமென்றதுக
"ள். நானுங்களை இந்த தேவதைகளுடன்
"சேர்த்து அதுகளில் உங்களைப் பங்கு
"டையவராக்கின்றேனென்றார். ஆகையா
"ல் எந்ததேவதைகளுக்காக ஹவிஸு எ
"டுத்தபோதிலும் பசிதாபங்கள் பங்குடை
"யதாகவிருக்கின்றதுகள். அவர் இதுகள்
"லோகங்களும், லோகபாலகர்களும் (இ
"னி) இதுகளுக்கு அன்னத்தை உண்டா
"க்குவோமென்று எண்ணினார்கள். அவர்
"ஜலத்தை அபிதபித்தார்; அப்படி அபிதபி
"க்கப்பட்ட ஜலங்களினின்றும் மூர்த்தி உ
"ண்டாயிற்று. அதுவே அன்னம். சிருஷ்
"டியான உடனே அது ஓடவிரும்பித்து.
"அதையவன் வாக்கால் பிடிக்க விரும்பினா
"ன்; அதை வாக்கால் கிரகிக்கக்கூடவில்லை.
"அதை வாக்கினால் கிரகித் திருப்பானே
"யாகில், அன்னத்தை உச்சரிப்பதினாலே
"திருப்தியுண்டாகும். சுவாசத்தினால அ
"தை கிரகிக்க இச்சித்தான். அதை சுவா
"சத்தினால் கிரகிக்கக் கூடவில்லை. அதை
"சுவாசத்தினால் பிடித்திருப்பானாகில், அ
"ன்னத்தை முகருவதினாலேயே திருப்தி
"யுண்டாகும். அதை பார்வையினால் கிர
"கிக்க இச்சித்தான். அதை பார்வையினா
"ல் கிரகிக்கக்கூடவில்லை. அதை பார்வை
"யினால் பிடித்திருப்பானாகில், அதைப்பா
"ர்ப்பதினாலே திருப்தி யுண்டாகும், அ
"தைக் கேள்வியினால் பிடிக்கவிரும்பினான்.
"அதைக் கேள்வியினால் பிடிக்கக்கூடவில்
"லை. அதைக் கேள்வியினால் கிரகித்திருப்
"பானாகில், அன்னத்தைக் கேட்பதினாலே
"யே திருப்தியுண்டாகும். அதை துவக்கினால்
"கிரகிக்கவிச்சித்தான்; அதை துவக்கினால்
"கிரகிக்கக்கூடவில்லை; அதை துவக்கினால்
"கிரகித்திருப்பானாகில், அன்னத்தைத்தொ
"டுவதினாலே திருப்தி யுண்டாகும். அ
"தை மனதினால் பிடிக்க இச்சித்தான்; அ
"தை மனதினால் பிடிக்கக் கூடவில்லை; அ
"தை மனதினால்பிடித்திருப்பானாகில், அன்
"னத்தை நினைப்பதினால் திருப்தி யுண்
"டாகும். அதை அபானத்தினால் கிரகிக்
"கவிரும்பினான் ; அதை கிரகித்தான். வா
"யுவானதுதான் அன்னத்தை கிரகிக்கிற
"து; ஏனென்றால் வாயுதானுக்கும் அன்ன
"த்தை ஜரிப்பிக்கிறது. நானில்லாவிட்டால்
"இது (மூர்த்தி) எப்படியிருக்குமென்று அ
"வன் தியானித்தான். அதை நான் எந்தவ
"ழியாய் அடைவேனென்று எண்ணினான்.
"பேச்சுவாக்கினாலும், சுவசித்தல் சுவாசத்
"தினாலும், பார்வை கண்ணினாலும், கேள்
"வி காதினாலும், ஸ்பர்சம் துவக்கினாலும்,
"நினைவு மனதினாலும், அபானம் அபானத்
"தினாலும், விஸர்ஜனம் சிருஷ்டிக்கருவிக
"ளாலும் ஆகும்பக்ஷத்தில், நான் யாரென்
"று யோசித்தான். அவனிந்த சமானத்
"தைத் தானேபிளந்து அந்த வழியாய்த்
"தானே பிரவேசித்தான். அந்த வழிக்கு
"விவிருதியென்று பெயர். அதுதான் ஆன
"ந்தஸ்தானம். அவனுக்கு மூன்றிருப்பி
"டம், மூன்று ஸ்வப்பினம். இதோரி
"டம், இதோரிடம், இதோரிடம். அவன்
"பிறந்தபிறகு பூதங்களையும்பொருட்டு வே
"றதைச் சொலலக்கூடுமென்று எண்ணி
"னான். அவனிதைப் பார்த்தேனென்று இ
"நத பிரும்மத்மனாகிப் புருஷனைப்பார்த்
"தான். ஆகையால இதந்திரன் என்றுபெ
"யர். இதநதிரன் என்கிறபெயர் சரிதான்.
"இதந்திரனாகிய அவனை மறைத்து இந்திர
"னென்கிறார்கள். ஏனெனில் தேவதைகள்
"மறைப்பதில் பிரியமுடையவர்கள்.

இந்த உபநிஷததில் இரண்டு • அத்தியாய
மூண்டு. அவற்றில் முதல் அத்தியாயமாத்
திரம் இதி லெழுதப்பட்டபடியாலும், மற்
றொன்று வருகிறபத்திரிகையில் எழுதப்படு
மாகையாலும், அதை எழுதியானபிறகு, இ
தின்பொருளைக்குறித்து விசாரிக்கப்படும்.

---

## லார்டு பேகன் வியாசம்.

### தர்ஜமா.

#### கல்வி.

கல்விகளிப்பும், கலனும், திரமும்தரும். முக்கியமாய் அது தனிமையில் களிப்பும், பேசினால் கலனும், தொழிலைப் பகுத்தறிந்து முடிப்பதில் திரனுந்தரும். புத்திமான்கள் காரியங்களில் ஏகதேசம் நன்றாய் முடிக்க வல்லவராயினும், காரியமுழுமையும் ஆராய்ந்து, முன்பின்யோசித்து, இசைந்த கருவியைக்கொண்டு நன்றாய் இயற்றல் கற்றோராலல்லாமல் மற்றோரால் முடியாது. படிப்பில் அதிககாலத்தைப்போக்குதல் சோம்பேறித்தனமாம். அதை பூஷணமாகவே கொள்ளுதல் டம்பமாம். கல்வியீன்றவிதிப்படிக்கே நடக்கவிரும்புதல் வித்தியார்த்திகளின் தன்மை. அது இயல்பைச் சிறப்பித்து, அனுபவத்தால் சிறப்படையும். ஏனெனில், இயல்பான பூண்டுகளைக் கழிப்பது போல், இயற்கைத்துறமையைக் கல்வியால் சீர்திருததவேண்டும். அன்றியும் அனுபவத்தால சோதிக்கப்படாத கல்வி ஸ்தூலமார்ககங்களைமாத்திரமேகாட்டும். கபடிகள் கல்வியை இகழ்வார்; மேதகர் அதைக்கண்டு மலைப்பார்; விவேகிகளதைப் பயன்படுத்துவார். ஏனெனில் இவ்விவேகம் கல்விக்குப் புறம்பானதும், விசாரத்தாலடையத்தக்கதுமாம். ஆக்ஷேபிக்கவேயாவது, முழுதும் நம்பிவிடவாவது, பேசிப் பொழுதுபோக்கவாவது, படியாமல் ஆராய்ந்து பகுத்தறியப்படி. சிலநூல்கள் உருசிபார்க்கததக்கவை; சிலவிழுங்கத்தக்கவை; சிலமென்று விழுங்கி ஜீரபித்துக் கொள்ளத்தக்கவை என்றால், சிலஏகதேசம்பார்த்தால் போதும். சிலர் முழுமையும் படிக்கவேண்டியவை யாயினும விசேஷகவனிப்பு வேண்டியதில்லை. இன்னும் சிலர் முழுமையும் வெகு ஜாக்கிரதையுடனும் ஊககததுடனும் படிக்கவேண்டியவையாம். சிறிதை அயலாரைக்கொண்டு படிப்பித்துக் கேட்பதே போதும். ஆயினும் இவ்வழியை சாதாரணமானவும், கவுணமானவும் விஷயங்களில் மாத்திரமே அவலம்பிக்கவேண்டியது. இல்லாவிடின், வடிக்கட்டியகல்வி வடிக்கட்டிய நீரைப்போல் உருசியற்றிருக்கும். படிப்பினால் பூர்ணனாவாய்; பெச்சினால் வசியவாக்காவாய்; எழுததினால் சரியானவனாவாய், அதிகமாயெழுதாதவனுக்குதாரணை மிகுந்திருக்கவேண்டும. அதிகமாய்ப் பேசாதவனுக்கு தணையிலாச் சாதுரியமிருக்கவேண்டும். அதிகமாய்ப் படிக்காதவனுக்கு கபடம் விசேஷமாயிருக்கவேண்டும். ஏனெனில் தெரியாததைத் தெரிந்ததாய் பாவிக்கவேண்டியிருக்கும். சரித்திரம்விவேகத்தையும், காவியம் சாதுரியத்தையும், பிரகிருதிசாஸ்திரம் ஆழ்மையையும், நீதிசாஸ்திரம் சேஷத்துவத்தையும், தற்காலங்கள் சர்ச்சாசக்தியையுந் தரும். பந்தடித்தல் நீரடைப்புக்கு நலம். வேட்டையாடல் உரசிற்குபலம். மெதுவாயுலாவல் திபனத்துக்குநலம். சவாரிசெய்தல் சிரசிற்கு நலம். இன்னும் இவ்வாறே உடலுக்குறிய பிணிகளுக்கு பரிகாரமுள்ளனபோல், புத்திக்குரிய தடைகளை நீக்கவும் தகுந்த சிகித்சைகளுண்டு. சஞ்சல சித்தமுடையவன் கணிதம்படிக்கவேண்டும். ஏனெனில் கி[illegible] பணங்களில், கவனம் ஈஷத்து நழுவி[illegible]ம், மறுபடி தொடங்கவேண்டியிருக்[illegible] தாரதமிய ஞானமில்லாதவன் வேதா[illegible]களைப் படிக்கவேண்டும். ஏனெனில் [illegible]ந்திகள் மயிரைப்பிளப்போர்; கூளத்தி[illegible]றும் ரசத்தைப்பொறுக்கி நிரூபிக்கமா[illegible] தவன் லாயர்களின் கேசுகளைப் படிக்[illegible]ண்டும். இவ்வாறே மனோவியாதிகளொ[illegible]வொன்றுக்கும் உரித்தான ஔஷத[illegible]ண்டு.

---

## வர்த்தமானக்குறிப்பு.

### நன்கொடை.

வேதஸமாஜத்தார்எடுத்தப்பிரபலமான காரியம் முடிவதற்கு ஒரு அச்சுக்கூடம்அத்தியாவசியகமென்றும், அது விசேஷத்திரவிய சாத்தியமென்றும், மனதிற்கொண்ட இராமநாதபுரம்-ஜமீன்தாரருடைய மந்திரியாகிய ம-ள-ள-ராஜா பொன்னுசாமித்தேவரவர்கள், அவர்களுடைய ஔதாரியத்தையும், எங்கள் காரிய கவுரவத்தையும், ஒருமித்து விளக்கும்படியாக ஆயிரம்ரூபாயாகிய பெருந்தொகையை, மனமுவந்தளித்ததற்கு பிரதியாய் நாங்கள் தகுந்தபடி வந்தனம் செய்யவும் அசக்தாளாயிருக்கிறோம். அவர்களிவ்வாறுசெய்ததில் அவர்களுடைய திருஷ்டியெல்லாங்கூடி தமது தேசத்து விஷயத்தில் தமக்குள்ளகடமையைச்செலுத்தவேண்டுமென்கிற பரிசுத்த சிந்தையே யாகையால், எங்களுடைய வந்தனத்தினாலாவது, சிலர்கையினாலாவது, அவர்களுக்கு ஆகவேண்டிய காரிய மொன்றுமில்லையல்லவா! இவ்வாறே இதர ஜமீன்தாரர்களும், ஹிந்து பிரபுக்களும் எங்களைக் கைதூக்கி யாதரிப்பார்களென்று நாங்கள் வெகு உறுதியாய் நம்புகிறோம்.

## பிரஸிடென்ஸிகாலேஜு.

கடந்த சூன்மீ முதல்தேதி சென்னைப்ப
ட்டணத்திலுள்ள இங்கிலீஷ் பாடசாலைகளு
க்கெல்லாம் தலைமையானதாகிய பிரஸிடெ
ன்ஸி காலேஜில் அந்தபாடசாலை ஏற்பட்ட
நாள் கொண்டாடப்பட்டது. கவர்னர்முத
லிய பலயூரோப்பியர்களாலும் ஹிந்துக்களி
ல் அனேக பெரியமனுஷியர்களாலும் அலங்
கரிக்கப்பட்டிருந்த அந்தசமயத்தில் டிரக்
டரவ் பப்ளிக்கு இன்ஸ்டிராக்ஷன் உத்ஸவ
த்தைத் தொடங்கி போனவருஷத்தில் இத்
தேசத்திலுண்டான வித்தியாவிருத்தியைக்
குறித்து சற்றும் பிரசங்கித்து அப்பாடசா
...க்காகவும், யூனிவர்சிடிக்காகவும்,பார்த்து
...கேட்டுமறியாதவோர்கட்டிடத்தை யுண்
...தும்படி யனுமதித்ததற்காக துரைத்த
...ாருக்கு வந்தனம்செய்தார். பிறகு வி
...ார்த்திகளைநோக்கி இறந்துபோன ஆ
...பில் வ. சடகோபாசாரியருடைய நற்
... நற்செய்கைகளைப் பலவாருய் மகிழ்
...அவர்வழியை நாடுவோருக்கு க்ஷேம
...பேரும்,பிரதிஷ்டையும், கிடைக்குமெ
...ல் எவ்வளவும் சந்தேகமில்லையென்று
...த்திச்சொல்லிமுடித்தனர்.

பின்பு பாடசாலையின் தலைமை உபாதித்
யாயராகிய தாமஸன்துரை கடந்த ௲௩-ம்
வருஷத்தில் அந்த பாடசாலையில் வித்தி
யார்த்திகளடைந்த விருத்தியையும் பிள்ளை
கள் வருஷாந்தத்தில் கொடுத்த பரீக்ஷை
யையும், பரீக்ஷகர்கள் கொடுத்த அபிப்பி
ராயங்களையுங்குறித்து ஒரு ரிபோர்ட்டைப்
படித்தார்

பிறகு சென்றவருஷத்தில் படித்து தேர்
ந்தவர்களுக்குயோக்கியதாபத்திரிகைகளும்,
அந்தந்த தரகதியில் உத்தமபரீக்ஷை கொடு
த்தவர்களுக்கு வெகுமானங்களும் கொடுக்
கப்பட்டது.

## யோக்கியதா பத்திரிகை வாங்கிய வர்களின் விவரம்.

உ-வது தரகதி.

வ. பாஷிய அய்யங்கார்.
தி. கோபாலகிஷ்ணன்.

௩-வது தரகதி.

ஹரிராயர்.
ரகுநாதராயர்.

முடிவில் கவர்னர் அவர்கள் கடந்தவரு
ஷத்தில் வித்தியார்த்திகளடைந்த விருத்தி
யைப் புகழ்ந்ததுமன்றி கவரன்மெண்டு உத்
தியோகங்களில் இச்சைவத்துப்படிப்பது
சரியல்லவென்றும், படித்து விருத்தியடைந்
தவர்கள் ஆனரேபில்-சடகோபா சாரியரை
ப்போல பாடசாலைகள் முதலிய லோகோ
பகாரமான காரியங்களைச்செய்து கீர்த்தி
பெற முயலவேண்டுமென்றும் பிரசங்கித்
து முடித்தார்.

---

## நார்மல்ஸ்கூல்.

இந்த பாடசாலையின் வருஷோத்ஸவம்
சூன மீ உ ௳ நடந்தது; அத்தருணத்தி
லும் கனம்பொருந்திய கவர்னரவர்கள் அக்
கிராசனாதிபத்தியம் வகித்தனர். முதலில்
டிரக்டரவ் பப்ளிக்கு இன்ஸ்டிரக்ஷன் எழு
ந்து மேற்படி பாடசாலை நன்ருய் விருத்தி
யடைந்துவருகிறதென்றும்; முக்கியமாய்ச்
சென்றவருஷத்தில் உபாத்தியாய வித்தி
யார்ததிகளுக்கு விசேஷ உத்தியோகங்கள்
கிடைத்தனவென்றும்; நார்மல்ஸ்கூலில் வீ
தம்பெற்றுக்கொண்டு படிக்கும் உபாத்தியா
ய வித்தியார்த்திகள், படித்தபிறகு ரு-வரு
ஷகாலம் உபாத்தியாயத் தொழிலி லிருக்க
வேண்டுமென்கிற நிபந்தனைப்படிக்கு எந்த
பாடசாலைகளிலாவது உபாத்தியாயராய்
ரு-வருஷகாலமிருந்தால் போதுமென்றும்
பிரசங்கித்தார். பிறகு பாடசாலையின் ரி
போர்ட்டுப் படிக்கப்பட்டு; அதன்மேல் மே
ஸ்தர்-ஆண்டர்ஸன், பூகோளப்பாடம் சொ
ல்லவேண்டிய முறையைப்பற்றி யொரு உப
நியாசம்செய்து, பின்பு அவ்விஷயத்தில்
சில பரீக்ஷை செய்வித்துக்காட்டினுர். அத
ன்மேல் அநதந்ததரகதியில் உத்தமபரீக்ஷை
கொடுத்தவர்களுக்கு வெகுமானம் அளிக்
கப்பட்டது.

கடசியில் கவர்னரவர்கள் சென்ற வருஷ
த்திய ரிபோர்ட்டு அதின் முன்வருஷத்திய
தைக்காட்டிலும் அதிக்திருப்தியைத் தந்த
தென்றும், அதற்கு தமிழருக்குக் கல்விவி
ஷயத்திலுண்டாயிருக்கிற சிரத்தையே கா
ரணமாய்த் தோன்றுகிறதென்றும், ஆதலா
ல் இனி நாளுக்குநாள் உபாத்தியாயவேலை
க்கு மகிமையுண்டாகுமென்றும், நாளது
வருஷத்திலுண்டாகும் வித்தியாவிருத்தியி
னுல் இன்னும் அதிக திருப்தியுண்டாகுமெ
ன றெதிர்பார்ப்பதாயும், சொல்லிமுடித்
தார்.

---

## ரெயில்வண்டி.

ஆதிமுதல் சென்னைப்பட்டணத்திலிரு
ந்து புகைவண்டி யேறும் மனிதர்களும் சா
மான்களும், ராயபுரத்திற்குச்சென்று ஏற
வேண்டியிருந்ததல்லவா? சென்ற ஜனுன்மா
தம்முதல் சரக்குகளெல்லாம் ஆனைகவுனிக்

கருகில் உப்புகொடாரத்தில் கட்டப்பட்டிருக்கிற ஸ்டேஷனில் ஏறவேண்டியதென்றும், பாட்டைசாரிகள்மாத்திரந்தான் ராயபுரத்தில் ஏறலாமென்றும் ஏற்பாடுசெய்யப்பட்டு, அப்படியே நடந்துவருகிறது. இதினால் வர்த்தகர்களுக்கு அசௌக்கிய முண்டானபோதிலும், இதுவரையில் மதிப்பற்றுப்போயிருந்த ஆனைகவுனிக்குச் சமீபபத்திலுள்ள வீடுகளுக்கு இனி மதிப்புண்டாகுமென்பதில் சந்தேகமில்லை. சவாரிவண்டிகள்சஞ்சரிக்கும் ரோட்டுகளை சரக்குவண்டிகளடைத்துக்கொள்வதால் வெகு அசந்தர்ப்பங்கள் நேரிடுகிறது.

---

## பஞ்சுஸ்க்ரூ.

வெகுநாளாய் ஏற்றுமதி செய்யப்பட்ட பஞ்சுகளை மூட்டைகளா யிருக்கிக்கட்ட தகுந்த யந்திரங்களில்லாமல் வர்த்தகர்கள் பட்டுக்கொண்டிருந்த வருத்தம், சிலவருஷங்களுக்குமுன் ஏற்பட்ட ஸ்க்ரூ என்னும் ஒரு யந்திரத்தால் ஒருவாறு நிவர்த்திக்கப்பட்டதல்லவா? ஆகிலும் இந்த யந்திரத்தின் சகாயத்தால் ஒரு நாளைக்கு ௲0 மூட்டைக்குமேல் இறுக்குவது அசாத்தியமாயிருந்தது. பிரகிருதத்தில் சமுத்திரக்கரையில் பிரண்டன் அண்டு கம்பெனியாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஒரு விநோதமான யந்திரத்தின் சகாயத்தால் நாளொன்றுக்கு ௲00 மூட்டைவரையில் இறுக்கியாகிறதென்றால், அதைப்பாராதவர்கள் அதைநம்புவதும் கடினமாயிருக்கும். இம்மாதிரியான மற்றொரு யந்திரத்தை அர்பத்நட்டு அண்டு கம்பெனியார்உப்பளத்துக்கருகில் கட்டப்போகிறார்கள்.

---

## பழமொழிகள்.

ஆறிலுஞ்சாவுதான் நூறிலுஞ்சாவுதான்.

ஆறுபோவதேகிழக்கு, அரசன்சொன்ன தேவழக்கு.

ஆறுவடிவிலும்கரிப்புத்தெளிவிலும்பயம்

ஆற்றிலேபோட்டாலும் அளந்துபோடவேண்டும்.

ஆனைக்கும் அடிசறுக்கும்.

ஆனைப்பார்க்க வெள்ளெழுத்தா.

ஆனைதுறத்தினாலும் ஆலயத்தில் நுழையாதே.

ஆனைக்கில்லை கானலும் மழையும்.

ஆனையிருந்து அரசாண்டவிடத்திலே பூனையிருந்து புலம்பி யழுகிறது.

---

## காலைவந்தனம்.

---

எண்சீர்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அய்ந்தாயபொறிகளும் அருமையாம்கரணமு மடங்கியானுறங்குமிரவில்,  
ஆதாரமற்றவெனை யாபத்துவாராது ஆதரித்தருள்தேவனே !  
செய்காரியங்களால் பொய்புடலயர்ந்திட சுழித்தியாம்சுகவேதுவால்,  
கருமேந்த்ரியங்களும் ஞானேந்த்ரியங்களும் பாதுகாத்துப்புதுக்கி ;  
கபவிடாதிரவெலாம் கொடுமைவந்தனுகாது காப்பாற்றிநின்று ; பின்னும்,  
காலைபோழ்தினில்பேதை துயினின்றெழச்செய்த கருணைவெள்ளப்பெருக்கே!  
மெய்ம்மயிர்சிலிர்க்கஉன் துய்யதிருவடிகளைச் சேர்ந்தென்சிரம்பணிந்து,  
கரையிலாவன்பொடுங் கைகூப்பிநின்றடிமை காலைவந்தனஞ்செய்கிறேன்.

---

## மாலைவந்தனம்.

---

எண்சீர்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கரியமேகங்களே வருஷித்ததென்னவே கடையனுமென்றன்மீது,  
கருணைப்பிரவாகம் பொழிந்திடும்தெய்வமே கருதரியசர்வேசனே!  
அரியவாழ்நாளிலொரு பெரியநாள்கழியவே அந்திபொழுதானஇரவில்,  
அடிமையுன்பாதார விந்தமணுகத்தொழ ஆனநற்சமயமய்ய!  
பிரியமுடனுதலால் இன்றுநானுற்றபல பெருநன்மையாவுமுன்னி,  
பெற்றசுகஞானமொடு மற்றபொருள்யாவையும் ஈய்ந்ததுன்கருணையென்றே,  
தெரியவசமோ ? இதை எளிதில் அறியச்செய்த பேசரியபேரின்பமே!  
பேதையிப்பெருநன்றி என்றுமறவாமலே பெருமையாய்த்தொழவருளுவாய்.